# புதிய இதயம்

திங்கள் இதழ்

'CREATING NEW HEARTS TO RISE AND SHINE'

மலர் - 2 இதழ் - 8 | எழு...ஒளிவீசு... எசாயா 60:1 | ஆகஸ்ட் 2023


## சுதந்திர நாடா..



# புதிய இதயம்
திங்கள் இதழ்


## EDITOR AND PUBLISHER

**Rev. Fr. Dr. Aron**

## EDITORIAL BOARD

1. Rev. Fr. Dr. Saminathan
2. Prof. Sathish Kumaran
3. Dr. N. Murugeshwari
4. Dr. Jose Suganya
5. S. Rajesh Jasmine
6. A. Albert Linda
7. Rozario Lavaniyan
8. Kalpana I.A.S.,
9. Dr. V. Maria Jeya Jothi
10. Raymond Jennifer
11. Jennifer Dominic
12. Justin Jesudoss

**CREATIVE AND DESIGN :**

J. Savari George

## ADDRESS


**Puthiya Idhayam Magazine, Sarugani, Devakottai (Taluk), Sivagangai (Dist.) Tamil Nadu - 630 411.**

**Ph: +91 94867 45500, +91 88078 78867.**

**Email: newheartmag@gmail.com**


PRIVATE CIRCULATION ONLY

## பணிபுரிய பணி ஏற்பு











## ஆசிரியரிடமிருந்து....

# இதய அன்பர்களே...



எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே-அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே. - பாரதியார்

“நாடு ஒன்றுதான். ஆனால் நம் வாழ்க்கை தான் பல மாறுதலுக்கு உட்பட்டுவிட்டது. முப்பது கோடி முகமுடையாள் என்று பாடினார் பாரதி அன்று. ஆனால் இன்று நூற்றி முப்பது கோடியாகிவிட்டது. மக்கள் தொகையில் மட்டுமா இந்த மாற்றம்? அடிப்படைகள் அனைத்திலும் பல மாற்றங்களை நம் பாரதத் தாய் சந்தித்து வருகிறாள்.

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த நிலை கெட்ட மாந்தரை நினைக்கையிலே
அஞ்சி அஞ்சி சாவார் - அவர்
அஞ்சாத பொருளில்லை இந்த அவனியிலே!
- பாரதியார்

என்று விடுதலை வேண்டி நின்றோம் அந்நியரிடம். பரங்கியரை விரட்ட வேற்றுமை விடுத்து ஒன்று பட்டோம். நம் இயற்கை வளங்களைச் சுரண்டிய அயல்நாட்டவரை பல அறப்போராட்டங்கள் மூலம் அகற்றினோம். பெற்றோம் சுதந்திரம். எவ்வாறு??

இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்ற நாடு ஒன்று கூட இல்லை. எண்ணற்ற புரட்சி வீரர்களின் இரத்தத்தால் பூத்தெழுந்த புதுமலர் தான் இந்திய சுதந்திரம். நமது நாட்டின் விடுதலைக்காக தூக்குமேடை ஏறிய புரட்சியாளர்கள் “வந்தே மாதரம்” என்ற முழக்கத்தோடு தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்தார்கள் இந்திய சுதந்திரதிற்காக....

ஆயிரம் ஆண்டு காலம் அடிமையாய் வாழ்வதை விட அரைமணி நேரம் சுதந்திர மனிதனாக இருப்பது சாலச் சிறந்தது. பாரதத் தாயின் அடிமைத் தளையை அகற்ற, அந்நியனை எதிர்த்து விடுதலை உணர்வை முதன் முதலில் விதைத்தவர் பூலித்தேவன்.

வெள்ளையர்களின் வரிவிதிப்பை ஏற்றுக் கொள்ளாத பாளையக்காரர்களான கட்டபொம்மனும், மருது சகோதரர்களும் தன் உயிரை துச்சமாக எண்ணி தூக்கு மேடையை துணிவோடு ஏற்றுக்கொண்டனர். “சுதந்திரம் எனது பிறப்புரிமை“ என்றவர் திலகர். சுதந்திரத்திற்காக சூல் கொண்டு கிளர்ச்சி செய்தவர் சுபாஷ் சந்திர போஸ், கிளர்ச்சிக்கு வித்திடவர் பகத் சிங், சுதந்திர காற்றை சுவாசிக்க சுதேசி கப்பலைச் செலுத்தியவர் வ.ஊ.சி.

சுதந்திரம்!சுதந்திரம்! என்றே உயிர் விட்டவர் சுப்பிரமணிய சிவா, உள்ளத்தில் சுதந்திர உணர்வை பாடலின் மூலம் ஊட்டியவர் மகாகவி பாரதி. உயிர் பிரிந்தாலும் பாரதக் கொடியை உயிராய் மதித்து காத்தவர் திருப்பூர் குமரன், தீவிரமாய் போராடிய தீரன் சின்னமலை, வீரன் திப்பு சுல்தான் போன்ற வீரர்களுக்கு நிகராக களத்தில் இறங்கிய வீரமங்கை வேலுநாச்சியார், வீராங்கனை ஜான்சி ராணி, வீர தீரமிக்க கேப்டன் இலட்சுமி என விடுதலை வேட்கைக்காக வெகுண்டெழுந்த வீறுகொண்ட நெஞ்சங்களின் வீர முழக்கத்தாலும், தியாகத்தாலும் கிடைத்த வெற்றி தான் சுந்திரம்.

அன்று நமக்காக
தலைவர்கள் நடத்தினர் யுத்தம்
தியாகிகள் சிந்தினர் இரத்தம்
விதவைகள் அழுகைச் சத்தம்
இறுதியில் பெற்றோம்
பாரத மாதாவின் முத்தம்
இவை அனைத்தையும்
மறந்துவிட்டோம் அதுதான் வருத்தம்
உலகின் எந்த மூலையிலும் சர்வாதிகாரத்தை நாங்கள் எதிர்க்கிறோம். எங்கள் மக்கள் எங்கள் நாட்டை ஆள வேண்டும்.
- கமலா சட்டோபாத்யாயா

புதிய இதயம்
திங்கள் இதழ்

சுதந்திரம் பெற்ற சுதந்திர இந்தியாவில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி மக்களை மக்களே ஆளும் குடியாட்சியை நிறுவினோம். தேசத்திற்காக அரும்பாடுப்பட்ட தலைவர்கள் வாயிலாக ஆட்சி அமைத்து சுதந்திர நாட்டை சீராக்கி நல்வழிப்படுத்தினோம். இந்தியா பல்வேறு தட்ப வெப்ப நிலைகளைக் கொண்ட போதிலும், அடிப்படை வளங்களை உற்பத்தி செய்து தன்னிறைவு கொண்டோம். இந்தியாவை நல்லதொரு முன்னேற்றத்தின் பாதையில் கொண்டு செல்ல பல நல்ல திட்டங்களைத் தீட்டி நேர்மையான வழியல் மிகச் சிறந்த முன்னுதாரணமாக வழி நடத்திச் சென்றனர் நம் முந்தைய தலைவர்கள்.

நாடென்ன செய்தது நமக்கு – என்ற
கேள்வியைக் கேட்பது எதற்கு – நீ
என்ன செய்தாய் அதற்கு - ஜான் கென்னடி

அன்று அர்ப்பணிப்பு தொண்டு உணர்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்டனர் இந்தியத் தலைவர்கள். இன்றைய நம் நாட்டின் நிலையை எண்ணிப் பார்த்தால் வேதனை தான் மிஞ்சுகிறது. ஜனநாயக நாட்டிலா நாம் வாழ்கிறோம் என்று எண்ணத் தோன்றுகிறது. சுதந்திரம் பெற்ற பின் அறிவியல், விஞ்ஞானம் மற்றும் பொருளாதாரத் துறையில் பல நல்ல முன்னேற்றம் பெற்று வந்த போதிலும் இன்று அதனை நல்ல வழியில் மேம்படுத்துவது என்பது தேக்க நிலையிலேயே தொடர்கின்றது, அன்று வேற்றுமையிலும் ஒன்றுபட்டு "இந்தியர்" என்ற உணர்வு மட்டுமே மேலோங்கி இருந்தது.

ஒன்றுபட்டோம் - உலகளவில்
உயர்ந்து நின்றோம்!
இந்தியர் என்று பெருமிதம் கொண்டோம்!
சமத்துவம், சகோதரத்துவம் கொண்டோம்!
வருவதைப் பகிர்ந்து உண்டோம்!
வந்தே மாதரம் என்போம்
என்ற உணர்விலேயே வளர்ந்து வந்தது.
நான் இறக்கத் தயாராக இல்லை ஏனெனில் வாழ்வதற்கு அதிக தைரியம் தேவை.
- சரோஜினி நாயுடு

பிறர்நலம் கருதாது "சுயநலம்" மட்டுமே கொண்ட தலைவர்களாலும் மக்களாலுமே நாம் பல துறைகளில் முன்னேற்றம் கொண்ட போதிலும் சீரிய தன்னிறைவு பெறுவதற்கு போராட வேண்டியுள்ளது. அந்நியரை எதிர்த்து போராடிய நாம் இயற்கை வளங்கள் அனைவருக்கும் சொந்தம் என்பதை உணராமல் குடிக்கும் நீருக்கும் போராடிக் கொண்டிருக்கிறோம்.

இந்தியா ஒரு மதசார்பற்ற நாடு. இந்தியர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். வாழலாம், எந்தக் கடவுளை வேண்டுமானாலும் வணங்கலாம் என்ற நிலைமாறி , ஜாதி வெறியாலும், மதவெறியாலும் மதம் பிடித்தவர்களாக நாட்டையும், நாட்டு மக்களையும் தீயிட்டு கொளுத்தியும் நிர்வாணப்படுத்தியும் மகிழ்கிறார்கள். நாடெங்கும் கண்டனக் குரல்களும், ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு போராட்டமும் ஒவ்வொரு விதத்தில் தொடர்ந்து கொண்டிருப்பது வேதனையாக இருக்கிறது.

பாரத நாடு பழம்பெரு நாடு ! நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர் - பாரதியார்

அனைவரும் "இந்தியர்" என்ற மனப்பான்மை இன்றி இந்நிலை தொடர்ந்தால் நாம் அனைத்து துறைகளிலும் முன்னேறினாலும் அந்நியரின் வலையில் சிக்குண்டு தவிக்கும் நிலை மீண்டும் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி நிற்கும் நிலைக்கு தள்ளப்பட நேரிடும்.

"ஒன்றுப்பட்டால் உண்டு வாழ்வு" என்பதற்கேற்ப உணர்ச்சிகள் செத்த பிணமாய் மனிதத்துவம் இல்லாமல் மனிதனாய் இருப்பதைக் காட்டிலும், மனிதனை நேசிக்கும் மனமாய், முகமாய், ஒளியாய், விழியாய் இருத்தல் வேண்டும்.

பெற்ற தாய் தன் பிள்ளையை மறந்தாலும்
பிள்ளை தன் தாயை மறந்தாலும்
உற்ற தேசத்தை உயிர் மறந்தாலும்
கற்றதனை நெஞ்சகம் மறந்தாலும்
கண்கள் விஞ்சி இமைப்பதை மறந்தாலும்
நான் இந்தியன். என்னுடைய சுதந்திரத்தை எதற்காகவும், எவருக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று உறுதி ஏற்போம். பெற்ற சுதந்திரத்தை பேணிக் காத்து மீதம் இருக்கும் நம் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்து நம் வருங்கால சந்ததியினருக்கு பரிசளிப்போம்.

சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்

இதய அன்பில்...

# மழலையின் விடுதலை



லிண்டா, முடிச்சூர், சென்னை

இந்தியா சுதந்திரமடைந்து 76 ஆண்டுகள் ஆஹா! எத்துனை மகிழ்ச்சி எத்துனை ஆடம்பரங்கள் எத்துனை, எத்துனை கோலாகல கொண்டாட்டங்கள். அத்துனையும் நன்று தான்.

நம்மில் எத்தனை பேர் நமது குழந்தைகளின் விடுதலையைப் பற்றி சிந்திக்கின்றோம். எந்தவித கவலையுமின்றி, வண்ண வண்ண கனவுகளுடன், வானமே எல்லையென எண்ணி சிறகடித்து பறந்து மிகப் பெரிய வரமாக நாம் அனுபவித்த நமது குழந்தைப் பருவத்தை இன்று நமது குழந்தைகள் அனுபவிக்கின்றார்களா? என்றால் அது கேள்விக்குரியே!

ஆம்! 2½ வயதில் Playschool, 3அரை வயதில் kindergarden 3 வயது முதலே தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ள நீச்சல் பயிற்சி, பாடல் பயிற்சி, இசை பயிற்சி, நடனப் பயிற்சி, கராத்தே பயிற்சி என்று எண்ணிலடங்கா வகுப்புகளுக்கு பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள் ஊன், உறக்கமின்றி ஓடிக் கொண்டிருப்பதை பார்க்கும் பொழுது அவர்கள் பெற்றோரின் விருப்பங்களுக்காக தங்களின் குழந்தை பருவத்தை அடகு வைத்து, உறங்குகின்ற நேரம் தவிர மற்ற அனைத்து நேரமும் ஏதாவதொரு பயிற்சி வகுப்புகளில் அடிமைகளாக விலங்கிடப்பட்டிருப்பதைக் கண்டு மனம் பதைபதைக்கின்றது.

ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய் - (69)

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனும் சொல் - (70)

தமது தந்தையும், தாயும் அனைவர் முன்னிலையிலும் பெருமையோடு தலைநிமிர்ந்து நிற்க வேண்டும் என்பதற்காக இன்றைய குழந்தைகள் கொடுக்கும் விலை தங்களது குழந்தைப்பருவம் எனும் பொக்கிஷமாகும்.

அன்றைய குழந்தைகளாகிய நாம், ஒருவருக்கொருவர் சண்டையிட்டு, விட்டுக்கொடுத்து, காக்கா கடி கடித்து திண்பண்டங்களை மட்டும் பகிர்ந்து கொள்ளாமல் உணர்வுகளையும் பகிர்ந்தே வளர்ந்தோம்.

ஆனால் இன்றைய குழந்தைகள் அனைவரும் வாழ்க்கைப் பந்தயத்தில் பங்கேற்று வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தினால் இயந்திரங்களாகவே வளருகின்றார்கள். நமது பிள்ளைகள் தோல்வியை சந்திக்க நாம் அனுமதிக்காததால் அவர்களுக்கு தோல்வி என்பது வெற்றியின் முதல்படி என்ற அனுபவமே இல்லாமல் போகின்றது. இன்றைய NEET மரணங்கள் பெற்றோருக்கு உணர்த்தும் பாடமே இது!

JEE, NEET, என்ற பல்வேறு போட்டித் தேர்வுகளுக்காக பயிற்சி, கொடுக்கும் பெற்றோர்கள் அன்பு, மகிழ்ச்சி, பொறுமை போன்ற வாழ்வின் அடிநாதமாக விளங்க வேண்டிய விழுமியங்களை பயிற்றுவிக்க தவறிவிடுகின்றோம்.

வாழ்க்கையில் வெற்றிக் கனியை சுவைக்க வேண்டும் என்பதற்காக சிறுபால்யத்திலிருந்தே சிறைச்சாலையில் வளர்க்கும் பெற்றோரின் நிலை அந்தோ பரிதாபம், குழந்தைகளின் நலனுக்காக கணவன், மனைவி இருவரும் பாடுபட்டு உழைத்து பெற்ற குழந்தையை கிரீச்சில் வளர்ப்பதால்தான் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது.

தாயின் பாசத்தையும், தந்தையின் அரவணைப்பையும் அனுபவிக்காத குழந்தைக்கு வளர்ந்த பிறகு முதிர் வயது பெற்றோர்கள் சுமையாகவே தோன்றுவார்கள்.

பெற்றோர்களே, இனியாவது விழித்துக் கொள்வோம். குழந்தைகள் திறமைசாலிகளாக, வெற்றியாளர்களாக வலம் வருவது அனைத்து பெற்றோரின் விருப்பமே. ஆனால் அதற்காக குழந்தைகளை கைதிகளாக்க வேண்டாம். விலங்கு விலையுயர்ந்ததாக, கலைநயமிக்கதாக, இருப்பினும் அதனை அணிந்து கொண்டிருக்கும் கைதிக்கு (குழந்தை) அது வலியையே தரும்.

பணம் காய்க்கும் மரங்களாகவும், இயந்திரங்களாகவும் குழந்தைகளை வளர்ப்பதை நிறுத்தி விட்டு, நம்மையே நாம் சற்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு மனிதநேயமிக்க நல்ல குழந்தைகளை வளர்த்தெடுப்போம். கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரம் வலிமை வாய்ந்தது என்பதை உணர்ந்தவர்களாய் நமது குழந்தைகள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க அனுமதித்து சீர்மிகு சமுதாயத்தை உருவாக்கவேண்டிய பொறுப்புள்ள பெற்றோர்களாக மாறுவோம். குழந்தைகளின் அடிமை சங்கிலியை அறுத்தெரிந்து குழந்தைகளை குழந்தைகளாக வளரவிடுவோம்.

# என் இந்தியா

பிரின்ஸி.அ - முடிச்சூர், சென்னை.



என் தாயின் கருவறையில் இருந்து
சுதந்திரம் அடைந்த மறு நொடியில்
என் மண்ணின் சுந்திர காற்றை சுவாசிகின்றேன் !
இந்த மண்ணின் தலைவர்களுக்கு என் நன்றி!
என் அன்னை சுவாசித்தாள் சுதந்திரக் காற்றை
ஆதலால் கருவறையில் சுவாசித்துக் கொண்டேன்
நானும் சுதந்திரக் காற்றை !
தம் உதிரம் சிந்தி இம்மண்ணிற்கு
சுதந்திரம் மட்டும் வாங்கி தரவில்லை
இம்மண்ணில் சுதந்திரத்தை விதைத்து சென்ற
என் தலைவர்களின் பெருமையை
நாம் தலை நிமிர்ந்து போற்றுவோம் !
மாயத்திலும், துளி நிமிடத்திலும்
அடைந்ததல்ல எங்கள் சுதந்திரம்
காயத்திலும், கடல் போரிலும்
கண்டது எங்கள் சுதந்திரம் !
நம் நாட்டுப்பற்றுக்கு கிடைத்த
மகத்தான வெற்றிதான் சுதந்திரம்
பெருமை பொங்க முழங்குவோம்,
வந்தே மாதரம்......

# வினாடி வினா – 19 (விடைகள்)

1. சரி 2 பேதுரு 2:16
தவறு 1 பேதுரு 4:16
சரி யாக்கோபு 4:17
2. யாக்கோபு முன்னுரை
3. யாக்கோபு 1:17
1 பேதுரு 1:9
2 பேதுரு 3:15
1 பேதுரு 5:8
4. யாக்கோபு 3:9
யாக்கோபு 4:5
5. 2 பேதுரு 2:22
யாக்கோபு 5:12
1 பேதுரு 5:5
6. 1 பேதுரு முன்னுரை
2 பேதுரு முன்னுரை
7. யாக்கோபு 3:17
1 பேதுரு 1:25
2 பேதுரு 3:5
8. 1 பேதுரு 3:4
1 பேதுரு 2:9
9. 2 பேதுரு 1:21
2 பேதுரு 2:4
10. யாக்கோபு 2:8
1 பேதுரு 2:20
1 பேதுரு 3:21

# தேசிய உயர்வு




சோபி. ஆ - கிண்டி, சென்னை.

வெள்ளையர்களை விரட்டினோம்.....
கொள்ளையர்களை..?
செல்வந்தரை உயர்த்தி விட்டோம்...
மற்றவரை...??
சேர்ந்திருப்பது இந்தியா என்றோம்...
சேரி வாழ்பவன் நிலை..?
விவசாயம் முதுகெலும்பு என்கிறோம்..
விவசாயி..?
மன்னர் ஆட்சி ஒழித்து விட்டோம்...
அதிகார வர்க்கம்..?
சமத்துவமே சன்மார்க்கம்
என்கிறோம்....
சாதிகளை..??
மிருகங்களை பாதுகாப்போம் என்கிறோம்....
மனிதர்களை...?
பாரத மாதா என்கிறோம்....
மாதரினத்தை....?
உயர்ந்தவன் மேலும் உயர்வதும்
தாழ்ந்தவன் மேலும் தாழ்வதல்ல
மக்களாட்சி....
அவரவர் உரிமை அவரவர்க்கு கொடுத்து அனைத்து மக்கள் மதமும் மொழியும்
சமமென மதித்து...
சாதிகளை ஒழித்து....
கயவரை அழித்து....
பொதுநலம் காக்கும்
புண்ணிய ஆட்சியே மக்களாட்சி.
அதுவே மகத்தான ஆட்சி!
வேற்றுமையை விரட்டுவோம்!
ஒற்றுமையை திரட்டுவோம்

# விடுதலை



விடுதலை நம்மில் பலரின் கனவு
அதனை நனவாக்கி புதுவாழ்வு
துவங்குபவர்களும் உண்டு!
கிடைத்ததை ஏற்றுக்கொண்டு
தன்னையே மாற்றிக்கொண்டு
தன்னைத் தானே ஏமாற்றிக்கொண்டு
சலிப்புடன் வாழ்பவர்களும் உண்டு!
பிறந்த குழந்தைக்கு கருவறையிலிருந்து விடுதலை
நடக்கும் நொடியில் இருக்கும் இடத்திலிருந்து விடுதலை
பேசும் பொழுதில் மௌனத்திலிருந்து விடுதலை
நண்பர்களுடன் இருந்தால் தனிமையிலிருந்து விடுதலை
படிப்பு முடித்தால் தேர்விலிருந்து விடுதலை
அலுவலகம் சேர்ந்தால் தண்டச்சோற்றிலிருந்து விடுதலை
திருமணம் நடந்தால் பிரம்மச்சரியத்திலிருந்து விடுதலை
வயது முதிர்ந்த பின் ஆரோக்கிய உடல்நலத்திலிருந்து விடுதலை
ஆயுள் முடிந்த பின் உலகத்திலிருந்து விடுதலை
'விடுதலை' பலவிதம்.
சில விடுதலைகள் நம் சந்தோஷத்தை சிறைபிடிக்கிறது.
பல விடுதலைகள் நம்முள்ளிருக்கும் சோகத்திற்கு விடுதலைதருகிறது.
விடுதலை ஒரு அரிய கனி.
அதை பாதுகாத்து, பத்திரப்படுத்தி வைப்பதும்,
மாறாக
அன்றே ருசித்து சுவை காண்பதும்
அவரவர் விருப்பம்.

-- அ. ரீஹன், முடிச்சூர்.

---



## புதிய இதயம் அறக்கட்டளை

### புதிய முயற்சி

## கிராம மேம்பாட்டு திட்டம்
## கணினி பயிற்சி
## (Computer Course)

இடம்: சருகணி, சிவகங்கை மாவட்டம்

புதிய இதயம்
திங்கள் இதழ்

# தமிழ் அறம் தொடர்ச்சி,

மரபுப்பாவலர். அகன், கீரனூர், புதுக்கோட்டை (மாவட்டம்).



கடவுள் அடியும் முடியும் அறியப்படாதவர் என்கிறோம்! உலக முதன் மொழியாகிய தமிழின் தோற்றத்திற்கும், இன்றிருக்கும் 7104 மொழிகளின் வளர்ச்சிக்கும் உள்ள ஒட்டு உறவை இட்டு அளக்க, எந்த ஒரு சார்பு அளவும் கிடைக்கவில்லை!

ஆதலால், கடவுளைப் போன்றே, அடியும்முடியும் காணஇயலாதது என்று, ஆய்வாளர்கள் பலரும் முடிவுகட்டினர்!

ஆனால், உலகின் மொழிகள் அனைத்திற்கும் அடியும் உண்டு, முடியும் உண்டு என்பதை, நுண்மாண்நுழைபுலம் மிக்க தேவ நேயப் பாவாணர் பெருமகனார் கண்டுபிடித்தார்! எனவே, உலகின் மொழிஆராய்ச்சியாளர்கட்கு அவர் விடிவெள்ளியாகத் திகழ்கின்றனர்!

ஏறத்தாழ 60 ஆண்டுகள் மொழி ஆய்வில் மூழ்கி, அவர் கண்டறிந்த பல்வேறு உண்மைகளுள்,

1. உலகின் முதல்மொழி தமிழே!
2. உலகில் உள்ள பிறமொழிகள் யாவும், தமிழ்மொழிச் சொற்கள் பலதிரிபுகளைப் பெற்று உருவாகிய சேய்மொழிகளே!

என்பன முதன்மையானவை ஆகும்!

## பிற உண்மைகள்:-

1. உலகின் மொழிகளுள் ஊடாடி உள்ள தமிழ்ச்சொற்கள், தமக்கே உரிய பொருளை விடாமல் பற்றிக் கொண்டு, பல்லாயிரம் ஆண்டுகளாகச் சொல் அளவில் மட்டும் திரிந்துள்ளன!
2. பொருள்மாறுபடும் போது சொல்லும் மாற

வேண்டும். அதற்குரிய சொல் ஈறுகள் சேர வேண்டும்!
காட்டு : மண் - மணல், கம்பு – கம்பி
மருங்கு – மருங்குல்.

3. வேர்ச்சொல்லும், அடிச்சொல்லும் பல்வேறு திரிபுகளைக் கொண்டால் தான், பல்வேறு மொழிகள் தோன்றவும் வளர்ச்சி பெறவும் முடியும்!

4. சொற்களின் போலித்திரிபும் புதிய சொற்களைத் தருகின்றன!

காட்டு: இடம் - இடன், நாளி – நாழி – நாடி, தருக்கு – செருக்கு, பகு – வகு, மீறு – வீறு, குழல் - குடல், பழம் - பயம் - பயன்!

5. ஒரு கருத்தில் இருந்து மற்றொரு கருத்துத் தோன்றும்போது, ஒரு சொல்லில் இருந்து மற்றொரு சொல் தோன்றுகிறது! கருத்து வேறுபடும் போது சொல்லும் 'வேறுபடல் வேண்டும்! இல்லாவிடில், பொருள் மயக்கம் ஏற்படுவதோடு, மொழியின் வளர்ச்சியும் தடைபடும்! இ∴தே, சொல் உருவாக்குவதற்கான அடிப்படை நெறிமுறை ஆகும்!

6. தொடர்புற்ற கருத்துக்களிலேயே சொற்களும் தொடர்புற்று வளருகின்றன!
காட்டு : கூடுதல் - பொருந்துதல், ஒத்தல், போர் செய்தல்.

7. காட்சிப் பொருளில் இருந்தே கருத்துப்பொருள்கள் உருவாகின்றன.
காட்டு : குழம்புதல் கலத்தல், மயங்குதல்
குழப்பம் கலக்கம்

8. ஒரு பொருளுக்கு வெவ்வேறு காரணம் கருதி இட்ட பெயர்கள், ஒருபொருள் - பல சொற்கள் ஆகின்றன.
காட்டு : மகவு, பிள்ளை, குழந்தை, சேய்!

9. பொருள் மாறுபடும்போது சொல்லும் மாறவேண்டும்! அப்படி, உடன்சேர்ந்து மாறாவிட்டால் கட்டாயத்திற்கு உள்ளாகிறது!
காட்டு : உரி – உரிதல், தோல்,
உரிமையாகுதல் எரிதல், நெருப்பு.

10. முன் ஒட்டுஇயல்பு தமிழ்மொழிக்கு இருந்தது.

11. ஒரு சொல்லே, அதன்பின்னணியில் உள்ள, மறைந்த வரலாற்றுச் செய்திகளை உணர்த்தும்.
காட்டு : தென்னை – தென்பகுதிக் குமரிக் கண்டத்தில் இயல்பாக வளர்ந்த மரம்.

12. உயிர் எழுத்துகளில் இ,ஈ - ஆகியவற்றின் மோனை ஆக எ,ஏ – யும்; உ-ஊ – ஆகியவற்றின் மோனை ஆக ஒ,ஓ – வும் தோன்றியிருத்தல் வேண்டும்!

13. வேர்ச்சொற்கள், உயிர் எழுத்துகளையும், உயிர்மெய் எழுத்துகளையும், முதலாகக் கொண்டும் அமைந்துள்ளன.

14. ஒரு மரத்திற்கு ஆணிவேர், பக்கவேர், கிளைவேர், சல்லிவேர் ஆகியன இருப்பதைப் போன்று, சொல்லுக்கும் இருக்கின்றன! நெல், கம்பு, வரகு போன்ற தவசங்களுக்கு ஆணிவேர், பக்கவேர் என்பவை இல்லை. சல்லிவேர் மட்டுமே உண்டு. அதைப்போன்ற சொற்களும் இருக்கின்றன.

15. தமிழ்மொழி தொடர்பான உண்மைகள்:-
1. தமிழ் குமரிநாட்டில் தோன்றிய மொழி.
2. தமிழ் சொல்வளம்மிக்க தற்சார்பு மொழி.
3. தமிழ் உலகின் முதன்மொழி.
4. தமிழ் வேர்ப்பொருள் காட்டும் மொழி.
5. தமிழ் தூய மரபு மொழி.
6. தமிழ் ஒப்பு உயர்வுஇல்லாத தனிமொழி.
7. தமிழ் உலகின் உயர்தனிச் செம்மொழி.

16. வேர்ச்சொல் காண்பது என்பது, தனிச்சொல்லை ஆணி வேர்வரை கண்டு அறிவது. இதனை ஆங்கிலத்தில் ழுசுஐபுஐஜே என்பர்!

17. மூலம் காண்பது என்பது, கூட்டுச்சொல்லை அதன் வடிவத்தை மீட்டு அமைத்துப் பொருள் சிறப்பை நெறிப்படப் புலப்படுத்துவது. இதனை ஆங்கிலத்தில் DERIVATION என்பர்.

## தமிழ் மொழியின் வளர்ச்சிப் படிநிலைகள்:

மூலத் தாய்மொழியான தமிழ்மொழி தோன்றிய காலத்தில் இருந்து, உலகின் மொழிகள், தனித்தும், பிறமொழிகளுடன் ஊடாடியும் வளர்ந்து வந்துள்ள வளர்ச்சி நிலைகள் இரண்டும், வளர்சிதைப் படிநிலைகள் இரண்டும் என, நான்குவகை ஆகும்!

### அ. வளர்ச்சிநிலைகள்:

1. அசைநிலை மொழி

மா – விலங்கு, ஈ - கொடு, என்பது போல், ஒரு நெடில், ஒரு குறிலும் ஒரு நெடிலும், இரு குறில்கள் என ஓரசைச் சொற்களாக வழக்கில் இருந்த காலம்! மா, கனா, அடி.

2. ஒட்டு நிலை மொழி

சொல்லின் உறுப்புகள் தொடர்ந்து நிற்றலும், ஒட்டி நிற்றலும்.

இல் + ஆள் = இல்லாள் - வீட்டை ஆள்பவள்
நா + இ = நாஇ - நாயி – நாய் நாவைத் தொங்க விட்டுக் கொண்டிருக்கும் விலங்கு

## ஆ. வளர்சிதை நிலைகள் :

1. உட்பிணைப்பு நிலை மொழி

ஓட்டிநிற்கும் சொற்களின் இறுதி உறுப்புகளின் பொருள் வேண்டாது, அசைநிலையை ஆக்கிக் கொள்ளுதல் இல்லாள் - மனைவி (இல்லத்தை ஆள்பவள் என்னும் பொருள் மறக்கப்பட்ட நிலை)
நாய் - நாய் என்னும் விலங்கு (நாவைத் தொங்கவிட்டிருப்பது என்ற பொருள் மறக்கப்பட்ட நிலை)

2. பன்மடி உட்பிணைப்பு நிலை:

இரண்டுக்கம் மேற்பட்ட சொற்கள் உட்பிணைந்து உருமாறி நிற்றல்!
பெருமான் - பெரு+ மக + அன் (பெருமகன்)
செய்விப்பி – செய்ய + ஈ + ஈ,
செய்ய + ஈ = செய்வி
செய்வி + ஈ = செய்விப் பீ
மூலத் தாய் மொழி ஆகிய தமிழ் மொழியில் இருந்து, உலகின் மொழிகளுக்குச் சென்றுள்ள சொல்

## ஆட்சிகளை இனம்காணும் முறை:

தமிழ்மொழி பிற மொழிகளுக்கு எல்லாம் மூலத்தாய்மொழி என்பதால் அதற்குரிய இயல்புகள் ஆன –

1. குறிப்பு ஒலி நிலைகளையும், சுட்டும் அடியாகத் தோன்றி கருத்து மொழி நிலைகளையும், வெளிப்படுத்திக் காட்டுகிறது.
2. தமிழ்ச் சொல்லின் தொடக்கமே ஓர் அசை வடிவில் அமைந்துள்ளது. அவையே ஆணிவேர்ச் சொற்களைக் கொண்டதாகவும்; பக்கவேர்ச் சொற்களைக் கொண்டதாகவும் மிளிர்கின்றன! இதையே அசைநிலை என்கிறோம்.

## காட்டு:

ஓர் அசைச் சொற்கள்:

1. ஓர் உயிர் நெடில் மட்டும்: ஆ,ஈ,ஊ,கூ.
2. ஓர் நெடிலும் ஒரு மெய் எழுத்தும்: நாய், காய்.
3. இரு குறில்கள் மட்டும்: அடி, கடி. பிடி, தடு...
4. ஒரு குறிலும் ஒரு நெடிலும்: புறா, கடா,
5. ஒரு குறிலும், ஒரு நெடிலும் : புறா, கடா,
6. ஒரு குறிலும். ஒரு நெடியும் ஒரு மெய்யும்: படாம், தடால், படார், குபீர்... இவை போன்றவையே ஓர் அசை ஆக அமையக் கூடியனவாகும்!

தொடரும்...

---

விவிலியம் அறிவோம்
சரியான விடை எழுதியோர்
**ஜூலை மாதம்**

1. Sr. Shirley,
   Assisi Bhavan, Sir Kalahasti.
2. M. Josephine Jeeva,
   kasimedu, Chennai -13.
3. M. Maria Merlin,
   Tharuvaikulam,Thoothukudi.
4. Annai kalai selvi,
   Tharuvaikulam,Thoothukudi.
5. G. Nithiya,
   Tharuvaikulam, Thoothukudi.

# இந்திய விடுதலையில் பெண்களின் பங்கு

முனைவர்.ந.முருகேஸ்வரி, பேராசிரியர் இயக்குநர் மற்றும் தலைவர்
மகளிரியல் துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி -23

சுதந்திரமடைந்து 75 ஆண்டுகளைக் கடந்தும் சுதந்திரம் இன்றி தவிக்கும் பெண்களும் சிறுமிகளும் இன்னும் விதிவிலக்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர். 2000 நூற்றாண்டில் கூட பெண்களுக்கான கொடுமைகளும் வன்முறைகளும் நாளுக்கு நாள் அரங்கேறிய வண்ணம் உள்ளது.

சுதந்திரத்திற்காக போராடிய பல பெண்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை குறைப்பதற்கும், உரிமைகளை மீட்டெடுக்கப்பட வேண்டும் என்பதை மிக ஆழமாக வலியுறுத்தி தங்களின் போராட்டங்களின் மூலமாக விடுதலையும் பெற்றுத் தந்தார்கள. அப்படிப்பட்ட திறமை மிக்க போராளிகள் பெற்றுத் தந்த இந்த சுதந்திரம் நிச்சயமாக காப்பாற்றப்பட வேண்டுமே தவிர தவறாக பயன்படுத்தப்படக்கூடாது.17ம் நூற்றாண்டில் ஆரம்பித்து விடுதலைக்கு முன்பு வரை தன்னுடைய இன்னுயிரையும் சொத்துக்களையும் தியாகம் செய்த பல பெண்கள் வாழ்ந்து சுதந்திரம் பெற்று தந்த இந்த இந்திய திருநாட்டில் சில பெண்களின் வரலாற்றை சுருக்கமாக எடுத்துரைத்துள்ளேன். விடுதலைக்காக போராடி வெளியே வராத முகங்கள் ஏராளமாக இருப்பினும் வெளிவந்த முகங்களின் முகவரிகள் கூட இன்னும் சரியாக அறியப்படவில்லை என்பதால் அவற்றில் சிலரின் முகவரிகள் மட்டும் இக்கட்டுரையில் வரிகளாக வளம் வந்துள்ளன.

17 ஆம் நூற்றாண்டில் கிபி 1780- 1783 சிவகங்கை தலைநகர் காளையார் கோவிலை ஆண்ட திறமை மிக்க பெண் வேலுநாச்சியாரை நம் அனைவராலும் மறக்க முடியாது. வீரத்தில் தமிழகத்தின் பெண்கள் குறைந்தவர்கள்



இல்லை என்பதற்கு சான்றாக விளங்கிய இவர் ஆங்கிலேயருக்கு எதிராக உரிமைக்காக போராடிய முதல் பெண் என்ற பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவர். இந்தியாவின் முதல் விடுதலைப் போராட்ட வீராங்கனை என்ற பெருமைக்குரியவரும் இவரே. 1730 ஆம் ஆண்டு வேலுநாச்சியார் அவர்கள் ராமநாதபுரம் சமஸ்தானம் மன்னர் செல்லமுத்து விஜய ரகுநாத சேதுபதி மற்றும் சக்கந்தி முத்தாத்தாள் இவர்களுக்கு ஒரே பெண் மகளாக பிறந்த இவரை ஆண் பிள்ளையைப் போன்று வளர்க்கப்பட்டார். பலவிதமான ஆயுதப் பயிற்சிகள் பெற்றதோடு பல மொழிகளையும் கற்றறிந்த முதல் பெண் இவர் ஆவார். 1746 ஆம் ஆண்டு சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதரை திருமணம் செய்தார். 1772 ஆம் ஆண்டு ஐரோப்பாவின் படையால் உயிரிழந்தார் இவரின் கணவர். தனது நாட்டை ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய பொழுது தன் முழு முயற்சியையும் பரிவாற்றலையும் பயன்படுத்தி சாதூர்யமாக நாட்டை மீட்டெடுத்த பெருமைக்குரியவர் வேலு நாச்சியார்.

1778 ஆம் ஆண்டில் கர்நாடக மாநிலத்தில் பிறந்த சென்னம்மா வெல்கம் என்ற ராஜ்ஜியத்தில்

சித்தூர் என்ற ஊரில் உள்ள மன்னர் முல்லசார்ஜா என்பவர் உடன் திருமணம் நடந்தது. இவர் ஆங்கிலேயரை எதிர்த்து போரிட்டு வீர மரணம் அடைந்த போற்றுதலுக்கும் பெயருக்கும் உரியவர்.





லட்சுமி பாய்க்கு அறிவுரை கூறும் அளவிற்கும் உயர்ந்தவர். சான்சி நாட்டை காப்பாற்றுவதற்காக இவர் ஜான்சி ராணியை போல் உடையணிந்து அவரை பாதுகாப்பாக வெளியேற உதவியவரும் இவரே. பல நூற்றாண்டு கடந்தும் பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தை எதிர்த்துப் போராடிய வீரத்தையும் வரலாற்றையும் பிந்தேல் கண்ட் பகுதியை சேர்ந்த மக்கள் இன்னும் தங்கள் நாட்டுப்புறப் பாடல் மூலம் ஜல்காரி பாய் அவர்களின் திறமையையும் வீரத்தையும் வெளிப்படுத்துகின்றனர்.

வட இந்தியாவின் “சான்சி” நாட்டின் ராணி 1857 ஆம் ஆண்டில் இந்திய கிளர்ச்சியால் பெரும் பங்காற்றி விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு போராடி வீரமிகுந்த பெண் ராணி லட்சுமி பாய். இவரின் போராட்ட குணங்கள் வலிமை மிகுந்தவை. பல பெண்களை தன்னுடைய கிளர்ச்சி படையில் தலைமைப் பொறுப்பில் நிர்வகித்த பெருமையும் இவருக்கு உண்டு. இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெரும் பங்காற்றிய மற்ற பெண்களுக்கு முன் மாதிரியாகவும் செயல் திறன் கொண்டவராகவும் விளங்கிய இவருடைய அர்ப்பணிப்பு விடுதலைக்கு மட்டுமல்லாது பெண்களின் தைரியத்திற்கும் வீரத்திற்கும் எடுத்துக்காட்டாக இன்னும் இவரது வரலாறு திகழ்கின்றது என்பதில் ஐயமில்லை.

1830 நவம்பர் 22 ல் பிறந்த ஜல்காரி பாய் 1857 இல் இந்திய கிளர்ச்சியால் ஜான்சி ராணியுடன் போரில் மிக முக்கிய பங்கு வகித்தவர். இவர் ஒரு சிறந்த விடுதலைப் போராட்ட வீராங்கனை ஆவார் ஏழை குடும்பத்தில் பிறந்த ஜம்காரி ஜான்சி ராணியின் பெண்கள் படையில் ஒரு சாதாரண வீராங்கனையாக இணைந்தாலும் பின்னாளில் மிக முக்கியமான முடிவுகளை எடுப்பதிலும் ராணி

ராணி அவந்திபாய் ராம்கட் நாட்டின் விக்ரமாதித்யா சிங் மனைவியான இவர் மத்திய பிரதேசத்தில் இருந்த இவர்களின் நாட்டை ஆங்கிலேய அரசு தங்களின் சட்டத்தின் பாதுகாப்பின் கீழ் வைத்ததால் அதனை மீட்க அவந்திபாய் உறுதி எடுத்து நான்காயிரம் படைவீரர்களை ஒன்று திரட்டி 1857 ஆம் ஆண்டு ஆங்கிலேயருக்கு எதிராக படையெடுத்து மிக தைரியமாக போர் புரிந்தும், ஆங்கிலேய படைக்கு முன்னால் இவர் ஈடுகொடுக்க முடியவில்லை. அவர்களின் எதிர்ப்பை தாங்க முடியாமல் தனது தோல்வியை தெரிந்து கொண்ட இவர் 1858 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் நாளன்று தனது வாளை எடுத்து தன்னைத்தானே மாய்த்துக் கொண்ட வீரமங்கை.

இந்தியாவின் பத்மஸ்ரீ விருது பெற்ற முதல் மலேசியப் பெண் என்ற பெருமைக்குரியவரும், மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் நிறுவனங்களில் ஒருவராக இருந்தவர் புவான் ஸ்ரீ பத்மஸ்ரீ ஜானகி. இவர் மலேசியாவின் சுதந்திரத்திற்காக போராடிய முன்னோடி பெண்களில் இவரும் ஒருவர். சுபாஷ் சந்திர போஸின் இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து இந்தியாவின் விடுதலைக்காக போராடியவர். தன்

பதினெட்டு வயதிலேயே இந்திய ராணுவத்தில் சேர்ந்து ஜான்சி ராணியின் படையில் துணை தளபதியாக பதவி உயர் பெற்றவரும், போர் வீராங்கனையாக திகழ்ந்தவரும் இவரே. சுபாஷ் சந்திர போஸின் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருந்து பிரித்தானியர்களுக்கு எதிராக செயல்பட்டு வெற்றியும் கண்டவர்.



விடுதலைக்காக போராடிய மிகச்சிறந்த போராளி எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் அன்னி பெசன்ட். இங்கிலாந்துநாட்டில் பிறந்த இவர் இயற்கையிலேயே புரட்சி மனப்பான்மை கொண்டதால் ஆங்கிலேயர்களின் அடக்குமுறை இவரை பாதித்தன. இவர் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாக 1914 - ம் ஆண்டு "காமன் வீல்" என்ற வார பத்திரிக்கையை தொடங்கினார். 1915- ம் ஆண்டு ஜூன் 14-ல் சென்னையில் "தி இந்தியா" என்ற பெயரில் நாளேடு ஒன்றையும் ஆரம்பித்து நடத்தினார். இதன் மூலம் அரசியலில் வெகுவாக ஈர்க்கப்பட்டு 1907ஆம் ஆண்டில் சூரத் நகரில் நடைபெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் ஏற்படவிருந்த மிகப்பெரும் பிரிவை தவிர்த்து லக்னோவில் நடைபெற்ற மாநாட்டில் இருவரையும் இணைத்த பெருமை இவரையேச்சேரும். சுயாட்சி இயக்கத்தை முதன் முதலில் தொடங்கி அதன் கிளைகளை நாடு முழுவதும் உருவாக்கினார்.

தன் பதவி காலத்தில் விடுதலை இயக்கத்தை வலுப்பெறச் செய்த இவரை ஆங்கில அரசு 1917-ம்ஆண்டு ஜூன்-15ஆம் தேதி காங்கிரஸ் தலைவர்களுடன் அன்னிபெசன்ட்டையும் கைது செய்தது. இவர்கள் கைது செய்ததை கண்டித்து காங்கிரஸ் இயக்கம் மற்றும் முஸ்லிம் லீக் இயக்கம், சத்தியாகிரகம் செய்ய போவதாக அறிவித்தவுடன் செய்வதறியாது ஆங்கில அரசு அவர்களை செப்டம்பர் மாதம் விடுதலை செய்தது. யாவர் இந்தியாவில் மட்டுமல்லாது பிரத்தானியாவுக்கு பயணம் செய்யும்போதெல்லாம் செல்லும் இடங்களில் இந்திய விடுதலைக்கு ஆதரவாக பொது மேடைகளில் உரையாற்றுவதும் இவரது வழக்கமாக இருந்தது. 1929 இல் பொதுநல வாய இந்தியா என்ற பெயரில் ஒரு அறிக்கை ஒன்றையும் பிரித்தானிய நாடாளு மன்றத்திற்கு அனுப்பி வைத்தார். தனது 82 வது வயதில் தீவிர அரசியலில் இருந்து விலகி பிரும்மஞான சபை முன்னேற்றத்திற்கு முனைப்பாக தன்னை அர்ப்பணித்தார். 1933 ஆம் ஆண்டு செப்டம்பர்-20 சென்னை அடையாரில் காலமான இவர் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் விட்டுச் சென்ற துணிச்சலும் வரலாறும் ஏராளம்.

இந்தியாவின் நைட்டிங்கேல் என்று அழைக்கப்படும் சரோஜினி நாயுடு அவர்கள் கவிஞர், எழுத்தாளர், சமூக ஆர்வலர், சுதந்திர போராளி. இந்திய தேசிய காங்கிரஸின் இரண்டாவது பெண் தலைவரும், உத்திரபிரதேச மாநிலத்தின் முதல் பெண் ஆளுநரும் ஆவார். இவரது பிறந்த நாளையே இந்தியாவில் மகளிர் தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. 1903-ம் ஆண்டு முதல்1917-ம் ஆண்டு வரை பல அரசியல் தலைவர்களோடு அறிமுகம் பெற்றார். காந்தியுடன் இணைந்து தண்டியாத்திரையில் ஈடுபட்டார். 1915-1918-ம் ஆண்டுகளில் இவர் இளைஞர்களின் நல்வாழ்வு, தேசப்பற்று, பணியாளர் நலன், பெண் கொடுமை போன்றக் கருத்துக்களை முன்வைத்து தன் சொற்பொழிவுகளின் மூலம்





விழிப்புணர்வை மேற்கொண்ட பெருமையும் இவருக்கு உண்டு. 1916 ஆம் ஆண்டில் ஜவஹர்லால் நேருவை சந்தித்து "சம்ரன் இண்டிகோ" பணியாளர்கள் பிரச்சனையைக் கையாண்டார். 1925- இல் காங்கிரஸின் முதல் பெண் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு சிறைக்கு சென்றாலும் இவர் சாதித்தவை ஏராளம். வலிமை உள்ள ஒருவர் வலிமையற்ற ஆண் அல்லது பெண்ணிற்கு பணி மற்றும் விளையாட்டில் உதவி செய்ய வேண்டும் என்ற தன்னுடைய வரிகளின் மூலம் நம்பிக்கையை விட்டுச் சென்றுள்ளார்.

கரம்சந்த் காந்தியின் வாழ்க்கை துணையாக இருந்த கஸ்தூரிபா காந்தி அவர்கள் தன் கணவர் ஏற்ற தேசிய விரதத்திற்காக காந்தியுடன் உழைத்து தென் ஆப்பிரிக்காவில் கருப்பின மக்களின் இன வெறி தாக்குதலுக்கு எதிராக போராடியதோடு தீவிர இந்திய விடுதலைப் போராட்டத்திலும் அரசியலிலும் ஈடுபட்டு பலமுறை சிறைக்கு சென்றவர்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்ட முதல் தமிழ்நாட்டுப் பெண் அம்புஜத்தம்மாள், தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் மாநில துணை தலைவராக 1957ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை பதவி வகித்தார். மேலும் மாநில சமூக நல வாரியத்தில் சேர்மன் என்ற பொறுப்பில் 1957 இல் இருந்து 1964 வரை இருந்தார்.

போராட்டங்களின் மூலமாக பலமுறை சிறைக்கு சென்ற இவரை காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட செல்ல மகள் என்ற பெருமைக்குரியவர்.1964 –ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருது இவருக்கு வழங்கப்பட்டது. காந்தியடிகளோடு இணைந்து பலவித போராட்டங்களில் இந்திய விடுதலைக்காக உத்வேகத்துடன் கலந்து கொண்டு ஆங்கிலேயர்களை துணிச்சலோடு எதிர்த்து போராடிய பெண் வீராங்கனை.

1890-ல் பிறந்த அஞ்சலை அம்மாள் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்திய விடுதலைப் போராளியும் தமிழ்நாட்டின் சட்ட பேரவை உறுப்பினரும் ஆவார். காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்ட தென்னிந்தியாவின் முதல் பெண் இவரேயாவார். இவர்விடுதலைப் போராட்டத்திற்காக தன் வீடு, சொத்து மற்றும் நிலங்கள் என அனைத்தையும் நாட்டிற்காக இழந்தவர். இவரை அனைத்திந்திய மகளிர் காங்கிரஸ் கட்சியில் தன்னைத்

தீவிரமாக ஏற்படுத்திக் கொண்டு மது ஒழிப்பு கொள்கை, சட்ட மறுப்பு மறியல் என்ற பல போராட்டங்களில் துணிச்சலாக போராடியவர். இவரின் போராட்டத்தை கண்டு ஆங்கிலேய அரசு காந்தியடிகள், இவரை சந்திப்பதற்கு தடை விதித்தது, எனினும் 1934 ஆம் ஆண்டு மாறுவேடத்தில் பர்தா அணிந்து குதிரை வண்டியில் சென்று காந்தியடிகளை சந்தித்தார். காந்தியடிகளின் அன்பிற்கும் பாசத்திற்கும் பாத்திரமாக திகழ்ந்த இவரின் நேர்மையான உழைப்பும் போராட்ட குணமும் வெகுவாக காந்தியடிகள் உட்பட அனைவரையும் கவர்ந்தது.

இப்படி இன்னும் முகவரியற்ற பல பெண்கள் தங்களின் திறமையும் வீரத்தையும் இந்திய சுதந்திர போராட்டத்தில் மட்டுமல்லாது குடும்பம், சமூகம், பணி செய்யும் இடம் என்ற அனைத்து தளங்களிலும் பலவித சவால்களையும் இன்னல்களையும் மற்றவர் நலனுக்காக அர்ப்பணிக்கும் இவர்களை அங்கீகரிப்பது நம் ஒவ்வொருவரின் கடமை. பெண்கள் பல்வேறு நிலைகளில் பல பணிகளில் பல தலைமைப் பொறுப்பில் இருந்தும் கூட இன்னும் பெண்களுக்கான முழு சுதந்திரம் என்பது குடும்பத்தில் இருந்து சமூகம் வரைக்கும் எட்டாக்கனியாகவே உள்ளது. சுதந்திரம் என்பது பிறர் கொடுத்து வருவது அல்ல. இயற்கையிலேயே இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு மனிதருக்கு கிடைத்த பொதுவான ஒன்று .

இதை அறியாமல் ஜாதி மத ஏற்றத்தாழ்வு என பல பேதங்களை கொண்டு இன்னும் இவ்வுலகில் பல போராட்டங்களும் நிகழ்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன பல போராட்டங்களின் மூலமாக பெற்றுத் தந்த இந்த சுதந்திரம் மனிதர்களை பேணி காப்பதற்கே தவிர அவர்களை அழிவுப்பாதையில் அழைத்துச் செல்வதற்கு அல்ல. இன்னும் மனித இனத்திற்கு புறம்பான பல செயல்களும் தொடர்ந்து குடும்பம் முதல் சமூகம் வரை நடந்து கொண்டிருக்கும், இந்த வேளையில் சட்டங்கள் வலுவான உள்ளது என்றாலும் இவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் சிக்கல்கள் உள்ளது என்பதும் நாம் அறிந்ததே. சட்டங்களை வைத்தே மனிதன் தன் திருத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை ஒவ்வொரு மனிதனும் சுய ஒழுக்கம், சுய கட்டுப்பாடு, சுயமரியாதை என இவை அனைத்தையும் உணரும் பொழுது சுதந்திரம் என்பது அனைவருக்கும் பொதுவானது என்பதும் நியாயமானது என்பதும் விளங்கும்.

**சுவாசிப்போம் - சுதந்திர காற்றை!!!**
**அழிப்போம் - வன்முறையை!!!**
**நினைவு கூறுவோம் - விடுதலைக்காக போராடிய பெண்களின் பங்களிப்பை!!!**
**கொண்டாடுவோம்- இந்திய சுதந்திரத்தை...!!!**



## ஜுலை மாதம் வண்ணம் தீட்டி பரிசு பெறும் மொட்டுக்கள்

1. **A. Rhema, 7th std**
   **Mudichur,**
   **Kancheepuram**

2. **A. Rejina, 5th std**
   **Mudichur,**
   **Kancheepuram**

3. **Haadwin Paul.E – 6th std.**
   **Vepery,**
   **Chennai**

4. **Nino Jovia**
   **Mudichur,**
   **Kancheepuram**

5. **Pino Joshna**
   **Mudichur,**
   **Kancheepuram**

புதிய இதயம்
திங்கள் இதழ்

# உலக தாய்ப்பால் வாரம்

வே. மெர்லின் (செவிலியர்), சென்னை.

உலக தாய்ப்பால் வாரம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தீம் எனும் கருப்பொருளுடன் குறிக்கப்படுகிறது. இந்த ஆண்டு, தாய்ப்பால் வாரத்திற்கான கருப்பொருள்.

“தாய்ப்பால் பாதுகாத்தல் அனைவருக்குமான பொறுப்பு” என்பதாகும்.

தாய்ப்பால் குழந்தைகளின் ஆரோக்கியத்தை உறுதி செய்வதற்கான மிகச் சிறந்த வழிகளில் ஒன்றாகும். இருப்பினும், கிட்டதட்ட 3 குழந்தைகளில் 2 குழந்தைகளுக்கு குறைந்தபட்சம் 6 மாதங்கள் கூட தாய்ப்பால் கொடுக்கப்படுவதில்லை என ஆய்வு தெரிவிக்கிறது. உலகளாவிய அளவில் தாய்ப்பால் கொடுப்பதை கட்டாயமாக்கினால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 8,20,000 குழந்தை உயிர்கள் காப்பாற்றப்படும் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவிக்கிறது.

ஒவ்வொரு குழந்தைகளுக்கும் தாய்ப்பால் புகட்டுவதன் அவசியத்தை வலியுறுத்தும் நோக்கத்துடன் உலக சுகாதார அமைப்பால் ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 முதல் 7-ம் தேதி வரை உலக தாய்ப்பால் வாரம் கொண்டாடப்படுகிறது.

பொதுவாக குழந்தை பிறந்து 2 வருடங்களுக்கு தாய்பால் கொடுக்கவேண்டும். குறைந்தது 1 வருடமாவது தாய்ப்பால் கொடுக்க வேண்டும். தாய்ப்பால் கொடுப்பதினால் குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும். மேலும் தாய்பாலில் இருந்துதான் குழந்தைக்கான அனைத்து விதமான ஊட்டச்சத்துக்களும் கிடைக்கின்றன. பாலூட்டும் பெண்கள் குழந்தை ஆரோக்கியத்திற்காக சாப்பிட வேண்டிய 10 ஊட்டச்சத்து மிக்க உணவுகள்:

குழந்தைக்கு மட்டுமல்லாது தாய்ப்பால் கொடுக்கும் அம்மாக்களின் ஆரோக்கியத்திற்கும் ஊட்டச்சத்து மிக்க உணவுகள் அவசியம். அப்போதுதான் குழந்தை பிறந்த பின் உண்டாகும் பாதிப்புகளை சமாளிக்க உடம்பில் தெம்பு இருக்கும். எனவே தாய் சேய் இருவருக்கும் ஆரோக்கியம் வழங்கும் உணவுப் பட்டியல் இதோ....

## 1. கால்சியம்:

குழந்தைகளின் எலும்பு அமைப்பை உருவாக்க மற்றும் ஆரோக்கியமான, உறுதியான எலும்புகளை பெற வேண்டும் எனில் கால்சியம்தான் அதற்கு உதவியாக இருக்கும்.



புதிதாகப் பிறந்த குழந்தையின் பற்கள் வளர்ச்சிக்கு இது முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே பாலூட்டும் தாய்மார்கள் உணவில் கால்சியம் கட்டாயம் சேர்க்கப்பட வேண்டும். பால், பனீர், தயிர், டோஃபு, மற்றும் கொட்டைகள் போன்ற உணவுகளை கண்டிப்பாக உட்கொள்ள வேண்டும்.

பாலூட்டும் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு பாலூட்டும் போது 15% வரை தங்கள் சொந்த கால்சியத்தையும், அவர்களின் எலும்பிலிருந்து 3.5% இழக்கிறார்கள். எனவே இதை ஈடு செய்ய கால்சியம் சத்து அவசியம்.

## 2. புரதச் சத்து:

புரதம் அல்லது புரோட்டீன் உணவில் சேர்ப்பது மிகவும் முக்கியமானது. ஏனெனில் இது திசுக்களின் கட்டுமானத் தொகுதிகளாக செயல்பட்டு வளர்ச்சியை ஊக்குவிக்கிறது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு இந்த ஊட்டச்சத்து தேவையானது, எனவே புதிய தாய்மார்கள் முட்டை, இறைச்சி, மீன், பீனட் பட்டர் மற்றும் பீன்ஸ் வகைகள் ஆகியவற்றை உணவில் சேர்க்க வேண்டும்.

## 3. ஒமேகா: DHA (Docosahexaenoic Acid)

இது குழந்தையின் கண்கள் மற்றும் மூளை வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. அதோடு நாள்ப்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைத்தல், மேலும் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் நிறைந்த உணவுகளாக சால்மன் மீன்கள் சாப்பிடலாம் மற்றும் சைவ தாய்மார்களுக்கு ஆளிவிதை, சோயா, அக்ரூட் பருப்புகள் மற்றும் பூசணி விதைகள் ஒமேகா 3 க்கு நல்ல ஆதாரங்கள்.

## 4. புரோபலாடிக்குகள்:

புரோபயாடிக்குள் 'நல்ல பாக்டீரியாக்களாகும். இது தொற்றுநோயை ஏற்படுத்தும் கெட்ட பாக்டீரியாவை எதிர்த்துப் போராட உதவுகிறது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு இது முக்கியம். ஏனெனில் இந்த நேரத்தில் அவர்களின் நோய் எதிர்ப்பு சக்தி பலவீனமாக இருக்கும்.

தயிர், பனீர், மோர், பச்சை பட்டாணி, ஊறுகாய், இட்லி மற்றும் மோர் ஆகியவை புரோபயாடிக்குளின் சிறந்த ஆதாரங்கள், அவற்றை தினசரி உணவில் சேர்த்துக்கொள்வது நல்லது.

## 5. இரும்புச் சத்து:

குழந்தையின் மூளை மற்றும் இரத்த அணுக்களின் வளர்ச்சிக்கு இரும்புச்சத்து உதவியாக இருக்கும். புதிய தாய்மார்கள் உணவின் ஒரு பகுதியாகவும் இருக்க வேண்டும். பருப்பு, பீன்ஸ், டோஃபு, கீரை மற்றும் முந்திரி ஆகியவை இரும்பின் இயற்கையான ஆதாரங்கள்.

பிரசவத்தின்போது இரத்தம் இழப்பு ஏற்படுவதால் இரும்புச்சத்து புதிய தாய்மார்களுக்கு இன்றியமையாத ஊட்டச்சத்து ஆகும். அதன்பிறகு சோர்வு மற்றும் துக்கமில்லா நீண்ட இரவுகள் போன்ற குழந்தை பிறப்பிற்கும். பின் உண்டாகும் பிரச்சனைகளுக்கு இரும்புச் சத்து அவசியம்.

## 6. கா∴பின் :

ஒன்பது மாதங்களுக்குப் பிறகு புதிய தாய்மார்கள் கா∴பி குடிக்கலாம் ஆனால் மிதமாக அருந்துவது அவசியம். ஏனெனில் கா∴பின் அதிகமாக உட்கொள்வது தாய்ப்பாலில் கசிந்து குழந்தைக்கும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்புகள் அதிகம்.

## 7. சப்ளிமெண்ட்ஸைக் கவனியுங்கள்:

பொதுவாக தாய்பால் கொடுக்கும் பெண்களுக்கு தினசரி வைட்டமின் பி – 12 சப்ளிமெண்ட் உட்கொள்ள பரிந்துரைக்கப்படுகிறது. வைட்டமின் பி-12 பெரும்பாலும் அசைவ உணவுகளின் மட்டுமே காணப்படுகிறது. எனவே சைவ உணவுகளில் போதுமான அளவு கிடைப்பது கடினம். இந்த வைட்டமின் பி-12 ஆனது கூடுதலாக, வைட்டமின் டி சப்ளிமெண்ட்ஸ். கால்சியம் மற்றும் பாஸ்பரஸை உறிஞ்ச உதவுகிறது. தாய்மார்கள் தங்கள் தினசரி உணவில் இவற்றைச் சேர்க்க வேண்டும்.

## 8. சுறுசுறுப்பாக இருங்கள்:

